லெட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை வெளியீடு—7

உ

சிவமயம்

ஸ்ரீராமஜெயம்

திவ்வியப் பிரபந்தத் திரட்டு

பதிப்பித்தோர்:

ந. சொ. அரு. அருணாசலன்

“ஸ்ரீ முத்துக்குமார்”

தியாகராயநகர்

சென்னை

உ

சிவமயம்

ஸ்ரீராமஜெயம்

THE CHOKKALINGA VIDYASALA
இளமையிற்கல்
LAKSHMIPURAM

திவ்வியப் பிரபந்தத் திரட்டு

பதிப்பித்தவர்:

ந. சொ. அரு. அருணாசலன்

"ஸ்ரீ முத்துக்குமார்"

தியாகராயநகர்

சென்னை

முதற் பதிப்பு 1949

சக்தி பிரஸ் லிமிடெட், (சாக்தி பிரஸ்)
ராயப்பேட்டை, சென்னை—14.

முகவுரை

பாண்டி நாட்டிலுள்ள லெட்சுமிபுரம் என்னும் திருநகரில் சொக்கலிங்க வித்தியாசாலை பல்லாண்டுகளாக நடைபெற்று வருவதை அன்பர்கள் அறிவார்கள். இவ் வித்தியாசாலையின் சார்பாகத் தமிழ் மொழியையும், தமிழ் நாட்டுச் சமய நெறிகளையும் வளர்த்து வருபவர் திரு. ந. சொ. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள். பாடசாலை மாணவர் மட்டுமேயன்றி தமிழ் நாட்டு அன்பர்களும் படித்துப் பயனடைதற்காக ஆண்டு தோறும் தெய்வ மணம் கமழும் திருப்பாடல்களைத் தொகுத்து வெளியிடும் தொண்டை இவர் மேற் கொண்டுள்ளார். அந்த வரிசையில் ஏழாவதாக வருவது இத் திவ்வியப் பிரபந்தத் திரட்டு.

திருமால் வழிபாடு தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நடந்து வருகின்றது. செந்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம் "திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே" என்று பாடிற்று. அந்த வகையில் திருமாலின் சீர் கேட்டு அவர் சேவடி அடைவதற்குச் சாதனமாக இருக்கும் அருள் நூல் திவ்வியப் பிரபந்தம் என்று தமிழகத்தில் போற்றப்படுகின்றது. அவ்வரிய பெரிய நூலினின்றும் திரட்டப்பட்ட 101 பாடல்களைக் கொண்டது இந் நூல். தமிழ் மணமும் தெய்வ மணமும் பொருந்தித் திகழும் இப் பாசுரங்கள் ஓதற்கு எளியன; உணர்தற்கு இனியன. கற்றதனால் ஆய பயன் இறைவனது நற்றாள் தொழுவதே. ஆதலால் கல்வி சிறந்த தமிழ் நாட்டில் இந் நூல் பொன்னே போல் போற்றப்படும் என்று கூறவும் வேண்டுமோ?

இத்தகைய சிறு நூல்களின் வாயிலாகத் தமிழகத்தார்க்குச் சிறந்த சேவை செய்துவரும் அன்பர் செட்டியார் அவர்களுக்குப் பல்லாண்டு கூறிப் பாராட்டுதல் பயனறிந்தோர் கடனாகும்.

சென்னை
25-1-49

ரா. பி. சேதுப்பிள்ளை.



ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

திவ்யப் பிரபந்தத் திரட்டு

பெரியாழ்வார்

திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு. (1)

அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும்அப்
பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே. (2)

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து
மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள்
குழுவினில் புகுதல் ஒட்டோம்
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்
இராக்கதர்வாழ் இலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து
எங்கள்குழாம் புகுந்து
கூடுமன முடையீர்கள் வரம்பொழி வந்து
ஒல்லைக் கூடுமினோ
நாடும் நகரமும் நன்கறிய
நமோ நாராயணாய வென்று
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்! வந்து
பல்லாண்டு கூறுமினே. (4)

அண்டக் குலத்துக் கதிபதியாகி
அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த
இருடீகேசன் தனக்கு
தொண்டக் குலத்திலுள்ளீர்! வந்தடி
தொழுது ஆயிரம்நாமம் சொல்லிப்
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து
பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்மினே. (5)

எந்தைதந்தை தந்தைதந்தைதம் மூத்தப்பன்
ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழி வழிஆட் செய்கின்றோம்
திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதிலரி உருவாகி
அரியை அழித்தவனைப்
பந்தனை தீரப் பல்லாண்டு
பல்லாயிரத் தாண்டென்று பாடுதுமே. (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி
திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று
குடிகுடி ஆட்செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை
ஆயிரம் தோளும் பொழி குருதி
பாய சுழற்றிய ஆழிவல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. (7)

நெய்யிடை நல்லதோர் சோறும்
நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்துஎன்னை
வெள்ளுயிர் ஆக்க வல்ல
பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப்
பல்லாண்டு கூறுவனே. (8)

உடுத்துக் களைந்தநின் பீதகவாடை
யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்ததுழாய் மலர்சூடிக் களைந்தன
சூடும்இத் தொண்டர்களோம்
விடுத்த திசைக் கருமம் திருத்தித்
திருவோணத் திருவிழவில்
படுத்தபைந் நாகணைப் பள்ளி கொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. (9)

எந்நாள் எம்பெருமான் உன்தனக்
கடியோம் என்றெழுத்துப் பட்ட
அந்நாளே அடியோங்க ளடிக்குடில்
வீடுபெற்று உய்ந்ததுகாண்
செந்நாள் தோற்றித் திருமதுரையுள்
சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே. (10)

அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும்
உனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணாவென்று
நாமம் பலபரவிப்
பல் வகையாலும் பவித்திரனே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே. (11)

பல்லாண்டென்று பவித்திரனைப் பர
மேட்டியைச் சார்ங்க மென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர்
விட்டு சித்தன் விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்
நமோநாராயணாய வென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து
ஏத்துவர் பல்லாண்டே. (12)

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ ஆண்டாள்

திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பவாய். (1)

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்புண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றி நீராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் லூடு கயலுகளப்
பூங்குவளைப்போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

ஆழிமழைக் கண்ணா! ஒன்றுநீ கைகாவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ ?
பிள்ளாய் ! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ ? பேய்ப்பெண்ணே !
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ ?
நாயகப் பெண்பிள்ளாய் ! நாராயணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ ?
தேச முடையாய் ! திறவேலோ ரெம்பாவாய். (7)

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ளபிள்ளைகளும்
போவான்போகின்றாரைப் போகாமல்காத்து உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோதுகலமுடைய
பாவாய் ! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். (12)

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!
சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

நாயகனாய் நின்ற நந்தகோப னுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே அம்மா!நீ
நேயநிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்த கோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துஉன் வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்க ணிரண்டும்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய் (22)

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா!உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோ ரெம்பாவாய். (23)

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுஉன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்று யாம்வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். (24)

ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனுய் ஒளித்து வளரத்
தரிக்கிலா ஞகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

மாலே! மணிவண்ணு! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையாய் அருளேலோ ரெம்பாவாய். (26)

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய் (27)

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம்உடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்குஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா! நீதாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)

சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (29)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றுஇறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய். (30)

—ஆண்டாள்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

ஆண்டாள்

வாழித் திருநாமம்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றுமூர்—நீதியால்
நல்ல பத்தர் வாழுமூர் நான் மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதூம் வம்பு.

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள்வாழியே,
திருப்பாவை முப்பதூஉம் செப்பினாள் வாழியே,
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே,
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே,
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே,
உயரரங்கர்க் கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே,
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே,
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

குலசேகர ஆழ்வார்

பெருமாள்

திருமொழி

தருதுயரம் தடாயேல்உன் சரண்அல்லால் சரண்இல்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட்டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி யதுவேபோ லிருந்தேனே (1)

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் விற்றுவக்கோட் டம்மா! நீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே (2)

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக் கோட் டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே (3)

செந்தழலே வந்துஅழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா உன்
அந்தமில்சீர்க் கல்லால் அகம்குழைய மாட்டேனே (4)

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே (5)

—குலசேகர ஆழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

திருச்சந்த விருத்தம்

நின்றதுஎந்தை ஊரகத்துஇருந்தது எந்தைபாடகத்து
அன்று வெஃகணைக்கிடந்தது என்னிலாத முன்னெலாம்
அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும்இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே.

இயக்கறுத பல்பிறப்பில் என்னைமாற்றி, இன்றுவந்து
உயக்கொள் மேகவண்ணன் நண்ணிஎன்னிலாய தன்னுளே
மயக்கினான் தன்மன்னு சோதிஆதலால்என்னாவிதான்
இயக்கெலாம் அறுத்து அறுதஇன்பவீடு பெற்றதே

—திருமழிசைப்பிரான்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

திருமாலை

வானுளா ரறிய லாகா வானவா என்பராகில்
தேனுலாந் துளப மாலைச் சென்னியா என்பராகில்
ஊனமா யினகள் செய்யும் ஊனகா ரகர்களேனும்
போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே.

பழுதிலா வொழுக லாற்றுப் பலசதுப் பேதிமார்காள்
இழிகுலத் தவர்க ளேனும் எம்மடி யார்களாகில்
தொழுமினீர் கொடுமின்கொள்மின் என்றுநின் னோடுமொக்க
வழிபட வருளி னாய்போல் மதிள்திரு வரங்கத் தானே

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

அமலனாதிபிரான்

அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதி ளரங்கத் தம்மான் திருக்
கமல பாதம் வந்து என் கண்ணி னுள்ளன வொக்கின்றதே.

ஆலமா மரத்தி னிலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழு முண்டான் அரங்கத் தரவின ணையான்
கோலமாமணி யாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில்
நீலமேனியையோ நிறைகொண்டதுஎன் நெஞ்சினையே.

—திருப்பாணாழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

பெரிய திருமொழி

குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன்மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா வென்னும் நாமம்.

தாயே தந்தையென்றும் தாரமேகிளை மக்கள்என்றும்
நோயே பட்டொழிந்தேன் உன்னைக் காண்பதோர் ஆசையினல்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாள் என்னைக் கொண்டருளே.

ஒருகுறளாய் இருநிலம்மூ வடிமண் வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகவென மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திரள்நான்கும் வேள்விஐந்தும்
அங்கங்கள் அவைஆறும் இசைகள் ஏழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே.

நும்மைத் தொழுதோம் நுந்தம் பணிசெய்திருக்கும் நும்மடியோம்
இம்மைக்கின்பம் பெற்ரோம் எந்தா யிந்தளூரீரே
எம்மைக் கடிதாக் கருமமருளி ஆவாவென் றிரங்கி
நம்மை ஒருகால் காட்டி நடந்தால் நாங்கள் உய்யோமே.

முன்னைவண்ணம் பாலின்வண்ணம் முழுதும் நிலைநின்ற
பின்னைவண்ணம் கொண்டல்வண்ணம் வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின்வண்ணம் புரையுந்திருமேனி
இன்ன வண்ணம் என்றுகாட்டீர் இந்தளூரீரே.

ஏழை யேதலன் கீழ்மகன் என்னது
இரங்கி மற்றவர்க்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மடநோக்கி உன்தோழி
உம்பி யெம்பிஎன் றொழிந்திலே உகந்து
தோழன்நீ எனக்கிங் கொழி என்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் னடியிணை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே.

—திருமங்கை ஆழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

திருக்குறுந்தாண்டகம்

முன்பொலா இராவணன்தன்
முதுமதிள் இலங்கை வேவித்து
அன்பினால் அனுமன்வந்து ஆங்கு
அடியிணை பணிய நின்றார்க்கு
என்பெலாம் உருகி யுக்கிட்டு
என்னுடை நெஞ்ச மென்னும்
அன்பினால் ஞானநீர் கொண்டு
ஆட்டுவன் அடிய னேனே.

—திருமங்கை ஆழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

திருநெடுந்தாண்டகம்

மின்னுருவாய் முன்னுருவில் வேதநான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள்தானாய்
பின்னுருவாய்முன்னுருவில் பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது, எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதமைந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில் திகழும் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்றவெந்தை
தளிர்புரையும் திருவடிஎன் தலைமேலவே.

திருவடிவில் கருநெடுமால் சேயனென்றும்
திரேதைக்கண் வளையுருவாய்த்திகழ்ந்தானென்றும்
பெருவடிவில் கடலமுதம் கொண்டகாலம்
பெருமானைக் கருநீலவண்ணன் தன்னை
ஒருவடித்தோருரு வென்று உணரலாகா
ஊழிதோறு ஊழிநின்றேத்த லல்லால்
கருவடிவில் செங்கண்ண வண்ணன் தன்னைக்
கட்டுரையே யாரொருவர் காண்கிற்பாரே.

பொன்னானைப் பொழிலேழும் காவல்பூண்ட
புகழானைப் இகழ்வாய தொண்டனேன்நான்
என்னானை என்னானை என்னிலல்லால்
என்னறிவன் ஏழையேன் உலகமேத்தும்
தென்னானை வடவானைக் குடபாலானைக்
குணபாலமதயானை இமையோர்க்கென்றும்
முன்னானைப் பின்னானார் வணங்கும் சோதி
திருமூழிக்களத்தானைப் முதலானையே.

—திருமங்கை ஆழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

முதல் திருவந்தாதி

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.

அவரவர் தாம்தாம் அறிந்தவா றேத்தி
இவரிவர் எம்பெருமான் என்று—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர் உலகளந்த
மூர்த்தி உருவே முதல்.

—பொய்கையாழ்வார்

ஸ்ரீ :

ஸ்ரீராமஜெயம்

இரண்டாம் திருவந்தாதி

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன், நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

ஓத்தின் பொருள்முடிவும் இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறமறிமின் ஏழைகாள்! ஓத்ததனை
வல்லீரேல் நன்று, அதனைமாட்டீரேல், மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு.

—பூதத்தாழ்வார்

ஸ்ரீ :

ஸ்ரீராமஜெயம்

மூன்றும் திருவந்தாதி

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து.

—பேயாழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

நம்மாழ்வார் திருவிருத்தம்

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா
வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியா
முறுமை உயிரளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்!
இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன்
செய்யும் விண்ணப்பமே.

—நம்மாழ்வார்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

பயனன்றாகிலும் பாங்கல்லாராகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயில் நின்றார் பொழில் சூழ் குருகூர் நம்பி
முயல் கின்றேனுன்றன் மொய்கழற் கன்பையே.

—மதுரகவியாழ்வார்

ஸ்ரீ:

நம்மாழ்வார்

திருவாய்மொழி

உயர்வற உயர்நலம் உடையவன் யவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன் அவன்
துயர்அறு சுடர்அடி தொழுது எழு என் மனனே.

நாளு நின்றடு நம பழமை அங்கொடு வினையுடனே
மாளும் ஓர் குறைவில்லை மனனக மலம் அறக்கழுவி
நாளு நம் திருவுடை அடிகள் தம் நலம் கழல் வணங்கி
மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே.

நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே அழிப்போடளிப்பவன்தானே
பூவியல் நால் தடந்தோளன் பொருபடை ஆழிசங்கு எந்தும்
காவி நன்மேனிக்கமலக் கண்ணன் என் கண்ணினுளானே.

ஊனில் வாழுயிரே நல்லைபோ உன்னைப் பெற்று
வானுளார் பெருமான் மதுசூதனன் என்னம்மான்
தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்து ஒழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே.

எம்மாவீட்டுத் திறமும் செப்பம், நின்
செம்மா பாதபற்புத் தலைசேர்த்தொல்லை
கைம்மா துன்பம் கடிந்த பிரானே
அம்மா அடியேன் வேண்டுவது ஈதே.

ஈதேயானுன்னைக் கொள்வது எஞ்ஞான்றும் என்
மைதோய் சோதிமணிவண்ண எந்தாய்
எய்தா நின்கழல் யானெய்த ஞானக்
கைதா காலக் கழிவு செய்யேலே.

ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத்து எவ்வெவையும்
சாதுவாய் நின் புகழின் தகையல்லால் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினாய் பூவின்மேல்
மாதுவாழ் மார்பினாய் என் சொல்லியான் வாழ்த்துவனே.

மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய்
தொழுங் காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே.
மழுங்காத ஞானமே படையாக மலருலகில்
தொழும்பாயார்க் களித்தால் உன்சுடர்ச்சோதி மறையாதோ.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்
தெழி குரலருவித் திருவேங்கடத்து
எழில் கொள்சோதி எந்தை தந்தை தந்தைக்கே.

குன்ற மேந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞால மளந்தபிரான் பரன்
சென்று சேர் திருவேங்கடமாமலை
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாளசண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தார் அடியார் தம்மடியார் எம்மடிகளே.

சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என்னாவின் கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தெனா வென்று வண்டுமுரல் திருவேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெருமான்உளனாகவே.

என்னாவதெத்தனை நாளைக்குப் போதும் புல்வீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்
மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினால்
தன்னாகவே கொண்டு சன்மம் செய்யாமையும் கொள்ளுமே.

பணிமின் திருவருளென்னும் அஞ்சீதப் பைம்பூம் பள்ளி
அணிமென்குழலார் இன்பக்கலவி அமுதுண்டார்
துணி முன்பு நாலப் பல்லேழையர் தாம் இழிப்பச்செல்வர்
மணி மின்னு மேனி நம்மாயவன் பேர் சொல்லி வாழ்மினோ.

கொண்டாட்டும் குலம் புனைவும் தமருற்றார் விழுநிதியும்
வண்டார் பூங்குழலாளும் மனையொழிய உயிர்மாய்தல்
கண்டாற்றேன் உலகியற்கை கடல் வண்ணா! அடியேனைப்
பண்டேபோல் கருதாது உன் அடிக்கே கூய்ப்பணிகொள்ளே.

கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக்
கொள்ளென்று தமம்மூடும் இவையென்ன உலகியற்கை?
வள்ளலே! மணி வண்ணா' உனகழற்கே வரும் பரிசு
வள்ளல் செய்து அடியேனை உனதருளால் வாங்காயே.

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்
மலியப் புகுந்து இசைபாடி ஆடியூழி தரக்கண்டோம். [மேல்

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்
தொண்டீர்! எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந்துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடி நின்றாடிப்பரந்து திரிகின்றனவே.

களைவாய் துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்
வளைவாய் நேமிப்படையாய்! குடந்தைக் கிடந்தமாமாயா!
தளரா வுடலம் எனதாவி சரிந்து போம் போது
இளையாது உனதாள் ஒருங்கப்பிடித்துப்போத இசைநீயே.

அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை யுறைமார்பா
நிகரில் புகழாய்! உலக மூன்றுடையாய்! என்னை யாள்வானே?
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகல் ஒன்றில்லா அடியேன் உனடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ?
புற்பா முதலா புல்லெறும் பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம்
பொய்யனாகும் புறமே தொழுவார்க் கெல்லாம்
செய்யில் வாளையுகளும் திருக்கண்ணபுரத்து
ஐயன் ஆகத்தணைப் பார்கட்கு அணியனே.

வாட்டாற்ருனடி வணங்கி மாஞாலப் பிறப்பறுப்பான்
கேட்டாயே மடநெஞ்சே! கேசவன் எம் பெருமானைப்
பாட்டாய பலபாடிப் பழவினைகள் பற்றறுத்து
நாட்டாரோடு இயல்வொழிந்து நாரணனை நண்ணினமே.

பிரியாது ஆட்செய் என்று பிறப்பறுத்து ஆளறக்கொண்டான்
அரியாகி இரணியனை ஆகங் கீண்டான் அன்று
பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெருத பயன் பெறுமாறு
வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்ருன் காட்டினனே.

நண்ணு அசுரர் நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த
எண்ணுதனகளெண்ணும்நன் முனிவர்இன்பம் தலை சிறப்பப்
பண்ணுர் பாடல்இன் கவிகள் யானுய்த் தன்னைத்தான் பாடித்
தென்னுவென்னும் என்னம்மான் திருமாலிருஞ் சோலையானே.

உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம்
பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்!
கற்ருர் மறைவாணர்கள் வாழ் திருப்பேராற்கு
அற்ருர்அடியார் தமக்கு அல்லல் நில்லாவே.

சர்வதாரி ஆண்டு
தைத் திங்கள்,
1949.

ந. சொ. அரு. அருணசலன்
"ஸ்ரீ முத்துக்குமார்."

◎

உ

சிவமயம்

சொக்கலிங்க வித்தியாசாலை

தேதி...............

அன்புடையீர்!

நமது வித்தியாசாலையின் வெளியீடாகிய திவ்வியப் பிரபந்தத் திரட்டு என்ற நூலை தங்களுக்கு அன்பளிப்பாக அனுப்பியுள்ளேன். பார்வையிட்டு தங்கள் ஆசி மொழிகளைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள

ந. செ. அரு. அருணசலஞ்.

இந்நூல் கீழேகண்ட இடங்களில்
விலையின்றிக் கிடைக்கும்

வேண்டுவோர் முக்காலணுத் தபாற்பில்லை
அனுப்பிப் பெற்றுக்கொள்க.

1. N. S. AR. அருணாசலன் செட்டியார்,
“ஸ்ரீ முத்துக்குமார்”
சரவண முதலியார் தெரு,
தியாகராயநகர், சென்னை.

2. தலைமை ஆசிரியர்,
சொக்கலிங்க வித்தியாசாலை, லெட்சுமிபுரம்.
கானாடுகாத்தான் வழி, Ramnad Dist.